RESEARCH ARTICLE

DOI:10.34256/irjt22s1023

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# நாலடியார் காட்டும் அடித்தள மக்கள்

சி. இராகினி [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# Lower Class People as Shown by Naladiyar

C. Rahini [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India.

* Corresponding Author: rahini.ma.2016@gmail.com

Received: 13-09-2021
Revised: 06-06-2022
Accepted: 10-06-2022
Published: 12-08-2022

Check for updates

**ABSTRACT**

People are living in a society where they are not getting any of the basic necessities of life and are struggling to fulfil those basic needs every day. So the economy is the biggest problem in their lives. And in terms of the economy, such people have to depend on the people at the top of society. The above reasons push such people to the status of base people. And even though economically backward people are called lower class people, such people can definitely recover from it and make efforts to raise their economy. But the question arises whether it is possible to live dependent on those at the top based on the economy, listen to the rhetoric of inferiority, and then acquire the rhetoric of superiority. It is also worth noting that people in such a situation have been recorded in association with their caste from early to modern literature. Although the so-called lower class people are said to go to the lowest level due to many factors, efforts can be made to recover from them and move to the top. But if we push them to the bottom with the rhetoric of cashless caste, we should also think about how they can rise above. As a result of thinking like that, this research has been carried out in order to find answers to questions like: what kind of explanation does the book Naladiyar give to the sayings of lower class people, and what is the basis of the distinction between superior and inferior?

**Keywords:** Naladiyar, Killor, Mellor, Birth, Work, Character.

## முன்னுரை

சமூகம் என்று தோன்றியதோ அந்நாள் முதற்கொண்டு இந்நாள் வரையிலும் பல மாறுதல்களை அடைந்துள்ளது. அதில் இனம், மதம், மொழி, பண்பாடு, ஆண்களின் நிலை, பெண்களின் நிலை எனச் சமூகக் காரணிகள் பலவற்றைக் குறிப்பிடலாம். ஆனாலும் இச்சமூகக் காரணிகள் அனைத்தும் தன்னிலும் கீழானவற்றை ஒதுக்கியே வைத்துள்ளது. மாற்றம் அடைந்ததற்கு மகிழ்ச்சிக் கொள்ளும் அதே தருணத்தில் அந்த மாற்றம் அனைவர் மனதிலும் முழு அளவில் ஏற்படவில்லை என்பதே உண்மை என்பதையும் நன்கறிவோம். ஏதோ ஒரு வகையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த அடிமைத்தனம் இன்றும் வேறோரு வடிவில் சில இடங்களில் நடந்து கொண்டுத்தான் இருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. அதாவது ஒருவரை ஒருவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று எண்ணும் மனப்போக்கு இன்றும் நம்மிடையே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது. இத்தகு நிலைகளைக் களைவதற்கு நாலடியார் என்னும் அறநூல் எவ்விதமான விளக்கங்களை நல்குகிறது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## நாலடியார்

இலக்கியங்கள் மனித வாழ்வியலைப் பிரதிபலிப்பன. தமிழ் இலக்கிய நூல்கள் சில வரலாற்றுப் பெட்டகமாக, வரலாற்றுக்குச் சான்றாதாரங்களாக திகழ்கின்றன. தமிழ்ச் சமூகத்தைப் பொருத்தவரையில் ஒப்புயர்வற்ற இலக்கியங்களைக் கற்றறிந்தச் சான்றோர் பெருமக்கள் தங்களின் ஆழ்ந்த அனுபவ அறிவோடு உணர்ந்த நிலையைப் பதிவு செய்து வைத்துள்ளனர். அவற்றை நாம் இன்றும் கற்கின்றோம். அவை அனைத்தும் வாழ்வின் உண்மை நிலையை அல்லது வாழ்விற்கான ஓர் இலக்கணமாகவே திகழ்கின்றன. அவற்றை வாழ்வில் கடைப்பிடித்தாலே போதும் சமூகம் வளர்ச்சி நிலையை எட்டிவிடும். அத்தகு இலக்கிய நூல்களுள் ஒன்றான நாலடியாரும் மனித வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டத் தவறவில்லை. ஒரு மனிதன் தன் வாழ்வில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும், எவ்விதம் நடந்து கொள்ளக் கூடாது என்பதை நாலடியார் தெற்றென விளக்குகிறது. அவற்றின் அடிப்படையில். இன்று சமூகம் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பதற்கு வைத்துள்ள வரன்முறைகளை உடைத்தெரிகிறது நாலடியார் என்பதற்கானச் சான்றுகளை மேற்கொண்டு காண்போம்.

## நாலடியார் காட்டும் மக்கள்

நாலடியாரில் மொத்தம் நாற்பது அதிகாரங்கள் உள்ளன. இந்நாற்பது அதிகாரங்களில் நான்கு அதிகாரங்கள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற நிலையிலுள்ள மக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அந்நான்கு அதிகாரங்கள் எவையெனில் உயர்ந்தோர்ப் பற்றிக் குறிப்பிடும் குடிப்பிறப்பு, மேன்மக்கள் என்ற அதிகாரமும், தாழ்ந்தோர்ப் பற்றி குறிப்பிடும் கீழ்மை, கயமை என்ற அதிகாரமும் ஆகும். இந்நான்கு அதிகாரங்களில் உயர்ந்தோரை நாலடியார் சான்றோர், குடிப்பிறந்தார், வடுவறு காட்சியார் (குற்றமற்ற மேன்மக்கள்), விழுமியோர், மேன்மக்கள் என்ற சொற்களால் குறிப்பிடுகிறது. அதுபோல தாழ்ந்தோரை கயவர், சிறியர், கடையாளர், கீழ், நன்றறியார், கீழ்கள், நேரல்லார், புல்லறிவினார், சிறியவர், கயம், முழுமக்கள் (மூடர்கள்) என்ற சொற்களால் குறிப்பிடுகின்றது.

## நாலடியார் காட்டும் மேன்மக்கள் (உயர்ந்தோர்) பண்புகள்

1. ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்கள்
2. பெரியோர்களுக்கு மதிப்பளிப்பவர்கள்
3. படியாமைக்கு அஞ்சுபவர்கள்
4. இழிவானச் செயல்களைச் செய்வதற்கு அஞ்சுபவர்கள்
5. தீயச் சொற்களைச் சொல்லாமல் இருப்பவர்கள்
6. எந்த இடத்தில் தவறிவிடுவோமோ என்று அஞ்சுபவர்கள்
7. வேண்டுபவர்களுக்கு கொடுக்க முடியாத நிலைக்கு அஞ்சுபவர்கள்.
8. நல்ல நண்பர்களைப் பெற்றிருப்பவர்கள்
9. இனியச் சொற்களைப் பேசுபவர்கள்.
10. வேண்டும் பொருளை வேண்டியவருக்கு கொடுப்பவர்கள்.
11. மனத்தூய்மை கொண்டவர்கள்.
12. வறுமை நேர்ந்தக் காலத்திலும் தன் கடமைகளை விடாமல் செய்பவர்கள்.
13. வறுமை நேர்ந்தக் காலத்திலும் பிறருக்கு உதவுபவர்கள்.
14. தன் மேல் சிறிது களங்கம் ஏற்பட்டாலும் உள்ளம் கலங்குபவர்கள்.
15. குற்றம் இல்லாதபடி பெருங்காரியங்களைச் செய்ய நினைப்பவர்கள்.
16. வறுமை அடைந்தாலும் குற்றச் செயல்களைச் செய்யாதவர்கள்.
17. ஒருநாள் ஒருவரிடம் பழகினாலும் நட்பு கொண்டு அன்பு செய்பவர்கள்.
18. கல்வியறிவில்லாதவன் தவறானவற்றை கூறும் போது அவற்றை கேட்டதற்கு வருந்துபவர்கள்.
19. கல்வியறிவில்லாதவன் தவறானவற்றை கூறிய நிலையில் பலர் முன்னிலையில் அவமானப்படும்போது அதற்காக மனம் இரங்குபவர்கள்.

20. பிறர் பொருளைக் களவு செய்யாதவர்கள்.
21. கள் குடிக்காதவர்கள்
22. தீயச் செயல்களைச் செய்யாதவர்கள்
23. அயலாரை அவமதித்து பேசாதவர்கள்.
24. பொய் சொல்லாதவர்கள்.
25. வறுமை நேர்ந்தக் காலத்திலும் துன்பப்படாமல் இருப்பவர்கள்.
26. அயலாருடைய இரகசியங்களைக் காதுகளால் கேட்காதவர்கள்.
27. புறம் பேசாதவர்கள்.
28. தம்மைப் பார்க்க ஒருவர் பலமுறை வந்தாலும் அவர்களுக்கு வேண்டிய உபசரிப்புகளைச் செய்பவர்கள்.

என மேன்மக்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள் குறித்து நாலடியார் இவ்விதம் விளக்கம் தருகிறது. அதனால் மேற்கண்ட பண்புகள் அல்லது குணங்கள் நிறைந்த மக்களையே நாம் உயர்ந்தோர் என அழைத்தல் தகும் என இதன் வழி அறிய முடிகின்றது.

## நாலடியார் காட்டும் கீழ்மக்கள் (தாழ்ந்தோர்) பண்புகள்

1. நல்லறங்களை அறிவுடையோர் எடுத்துக் கூறும் போது கூட, தன் தீய குணத்தை விடாதவர்கள்.
2. தன் மனம் விரும்பியபடியே வரம்பு கடந்து நடப்பவர்கள்.
3. சான்றோர்களை அவமதிப்பவர்கள்.
4. பொய் பேசுபவர்கள்.
5. செல்வம் சேர்ந்தப் பின் தன் நிலை மாறி நடப்பவர்கள்.
6. நன்றி மறந்தவர்களாய் இருப்பவர்கள்.
7. செல்வம் சேரும் போது வரம்பு கடந்து பேசுபவர்கள்.
8. இழிவானச் செயல்களைச் செய்பவர்கள்.
9. கடுமையாகப் பேசக் கூடியவர்கள்.
10. யாரிடத்திலும் தயவு காட்டதவர்கள்.
11. பிறர் துன்பத்தைக் கண்டு மகிழ்பவர்கள்.
12. கோபம் கொள்ளுபவர்கள்.
13. தன்னை மதிக்காதவரிடத்திலும் செல்லுபவர்கள்.
14. பிறரைப் பழித்துப் பேசுபவர்கள்.
15. தம்மைப் பார்க்க பலமுறை வந்தால் அவர்களை அவமதித்து பேசுபவர்கள்.
16. நல்ல நூல்களின் பொருளை அறியாமல் இருப்பவர்கள்.
17. குற்றங்களை மட்டும்கண்டு பலர் அறியும்படி கூறுபவர்கள்.
18. பிறர் தன்னைத் திட்டியதையே மறவாமல் நினைத்துக் கொண்டிருப்பவர்கள்.
19. நன்மைச் செய்தாலும் தீயதாகவே எடுத்துக் கொள்பவர்கள்.
20. உயர்நிலைக்குச் சென்றாலும் பிறருக்கு உதவாதவர்கள்.
21. கல் போன்ற மனம் கொண்டவர்கள்.
22. பிறருக்கு எந்த உதவியும் செய்யாதவர்கள்.

என மேற்கண்டவற்றை கீழ்மக்களுக்கு உரிய பண்புகளாக நாலடியார் வரையறை செய்கிறது. இவ்வாறு நாலடியார் என்னும் அறநூல் மேன்மக்கள், கீழ்மக்கள் என்போர்க்கான வரையறையை அவர்களின் பண்பின் அடிப்படையிலேயே தீர்மானித்துள்ளது. மேற்கண்ட பண்புகள் ஒருவரிடத்தில் வெளிப்படும் போதே அவர்களை நாம் மேன்மக்கள், கீழ்மக்கள் என்ற பெயரில் அழைக்கின்றோம். அவ்வாறு இல்லாமல் பிறந்த உடனே நான் உயர்குலத்தைச் சார்ந்தவன் என்று கூறுவது அறிவின்மையின் அடையாளம் என்பதை திரிகடுகமும்,

"தொல்லவையுள் தோன்றுங் குடிமையும் தொக்கிருந்த
நல்லவையுள் மேம்பட்ட கல்வியும் - வெல்சமத்து
வேந்துவப்ப வட்டார்த்த வென்றியும் இம்மூன்றும்
தாந்தம்மைக் கூறாப் பொருள்"

என்கிறது (Nallatanar, 2012). அதாவது மனிதனாக பிறந்த எவரும், தன்னுடைய குடிப்பிறப்பு, கல்வி, வீரம் ஆகிய இம்மூன்றையும் தானாக சிறப்பித்துக் கொண்டு இருத்தல் கூடாது என்கிறது. இங்கும் குடிப்பிறப்பு என்பது அவர்களின் பண்புகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படக்கூடியது என்பதை தெளிவாக அறிய முடிகிறது. எனில் அப்பண்புகள் என்ன என்பதை நாலடியார்,

"நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லளவு அல்லால் பொருளில்லை - தொல் சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவம் கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம்"

என்ற செய்யுளின் வழி உயர்குலம், தாழ்குலம் என்ற சொல்லிற்கே பொருளில்லை என்றும், பொருள் (வாழ்வின் பொருள்), தவம், கல்வி, முயற்சி என்ற நான்கின் அடிப்படையில் தான் குடிப்பிறப்பின் மேன்மை உயரும் என்று உயர்குடிப்பிறப்பிற்கு உண்டான அளவுகோல்களாக அவற்றை வறையறுத்துள்ளது (Madurai Muthaliyar, 1988). ஆக வாழ்வின் பொருளை உணர்ந்து நல்லறங்களை செய்து வாழ்பவர்களாக, அனைத்து செயல்களையும் தவம் மேற்கோள்வது போல மனதை ஒருநிலைப்படுத்தி நிதானத்துடன் செயல்படுபவர்களாக, கல்வி அறிவைப் பெற்றவர்களாக, அனைத்து செயல்களிலும் முயற்சியை விடாது மேற்கொள்பவர்களாக இருப்பவர்களால் தான் குடிப்பிறப்பின் மேன்மை உயரும் என்று கூறுகிறது. அதனால் பிறந்த உடனே ஒருவருக்கு மேன்மக்கள் என்ற பெயர் ஏற்பட்டுவிடாது என்பது அறியமுடிகிறது. இதனால் பிறப்பின் அடிப்படையில் மேன்மக்கள் என்ற பெயரினைப் பெறுவதையும் நாலடியார் ஏற்பதில்லை என்பதையும் அறியமுடிகிறது. மேலும் அதற்கு வலு சேர்க்கும் விதத்தில் மற்றோரு செய்யுளிலும் மக்கள் என்பவர் தம் இனத்தாரை ஒத்து காணப்படுவதில்லை. நல்ல மனத்தின் அறிவை ஒத்தவர்களே மக்கள் என்று கூறுகிறது. அதனை,

"கடல் சார்ந்தும் இன்னீர் பிறக்கும் மலைசார்ந்தும்
உப்பீண்டு உவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனையர் அல்லர் எற்கடல் தண் சேர்ப்ப
மனத்தனையர் மக்கள்ளென் பார்"

என்று கூறுகிறது (Madurai Muthaliyar, 1988). அதோடு இச்செய்யுள் இன்னொரு கருத்தையும் முன்வைக்கிறது. அதாவது உப்புச் சுவையையுடைய கடலைச் சார்ந்தும் இனியச் சுவையுடைய நீர் உண்டாகும். இனியச் சுவையையுடைய மலையைச் சார்ந்தும் உவர்நீர் உண்டாகும் என்று கூறுவதன் வழி எவ்விடத்திலும் மேன்மக்களும் தோன்றாலாம். கீழ்மக்களும் தோன்றலாம். அதனால் இனம் என்ற ஒன்றையே மறுப்பதாக இப்பாடல் அமைகிறது. இக்கருத்தையே நான்மணிக்கடிகையும்,

"கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும், மான் வயிற்றில்
ஒள்அரி தாரம் பிறக்கும் - பெருங்கடலுள்
பல்விளைய முத்தம் பிறக்கும், அறிவார் யார்?
நல்லாள் பிறக்கும் குடி"

என்று கூறுகிறது (Thamizh priyan, 2015). அறிவார் யார்? என்ற கேள்வியின் வழியாகவே நல்ல குணம் படைத்த மனிதர் இக்குடியில் தான் பிறப்பர் என்று எவராலும் கூற முடியாது என்று

குறிப்பிடுகிறது. ஆக நல்ல குணம் படைத்தவர்களே உயர்ந்தவர்கள் என்றும், அந்த நல்ல குணங்கள் எவை எவை என்று பட்டியலிட்டும் நாலடியார் காட்டுகிறது. ஆனால் சமூகம் உயர்ந்தவர்கள் என்பதற்கான அளவுகோலாக பிறப்பையும், தொழிலையும் முன்வைத்துள்ளது. இதில் பிறப்பு என்பது ஒருவருக்கு மேன்மக்கள் என்ற பெயரினை ஏற்படுத்துவதில்லை என்பதை மேற்கண்டவற்றால் அறிந்தோம். அதற்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக பிற்கால ஔவையார் இயற்றிய ஆத்திச்சூடி நூலிலும் "கீழ்மை அகற்று", "மேன்மக்கள் சொற்கேள்" போன்ற கருத்துகள் தெளிவாக பண்பின் அடிப்படையிலே கீழ்மக்கள், மேன்மக்கள் என்ற சொல்லாட்சிகள் ஆளப்பட்டுள்ளன என்பதை தெற்றென எடுத்துரைக்கிறது (Auvaiyar, 2011a). அது போல் தொழிலின் அடிப்படையில் இச்சொல்லாடல்கள் ஏற்பட்டனவா என்று நோக்கும் போது திருக்குறளும்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்"

என்று கூறியுள்ளது (Thiruvalluvar, 2009). இங்கு திருக்குறளையும் தொழிலின் அடிப்படையில் உயிர்கள் வேறுபடுகின்றன, என்று சான்றுக்கு அழைத்துக் கொள்கின்றனர். ஆனால் இக்குறளில் இடம்பெற்றுள்ள 'தொழில்' என்ற சொல்லிற்கு செயல் என்ற பொருளும் உள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும். செய்கின்ற செயல் அடிப்படையிலே மக்களினம் வேறுபடுகிறது என்று பொருள் கொள்வோமேயானால் அதாவது மக்களினம் செய்கின்ற செயல் என்பதில் எல்லா உயிர்களிடத்திலும் அன்புச் செய்தல், பொய் பேசாதிருத்தல் என அனைத்து பண்பு செயல்களும் அடங்கியிருத்தல் நோக்கத்தக்கது.

அதனை விடுத்து ஒரு மனிதன் அவன் வாழ்வாதரத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதன் பொருட்டு செய்கின்ற பணியை கீழானது என்று கூறி ஒதுக்குவது எந்த விதத்தில் பொருத்தமானதாக இருக்கிறது 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று கூறுகிறோம். அப்படியிருக்க ஒரு தொழில் (பணி) இழிவானது என்பதை எவ்வாறு கூறமுடியும். எந்த ஒரு பணியைச் செய்வதற்கும் அதில் சிறப்பெய்தியிருக்க வேண்டும். அந்த பணியை மேற்கொள்பவர்களுக்கு தான் அதன் சிறப்பும், அதன் கடினமும் தெரியும். கடினமான பணிகளைச் செய்பவர்களையே திறமையானவர்கள் என்றழைப்போம். அதன் அடிப்படையில் கழிவறையைச் சுத்தம் செய்தல், பிணம் எரிப்பது, செருப்பு தைப்பது எல்லாம் மிக எளிமையான பணிகளா? என்ற கேள்வி தான் எழுகிறது. நிலை இப்படியிருக்க கடினமான பணிகளுக்கு இழித்தொழில்கள் என்று பெயர் கொடுத்துள்ளோம்.

மேற்கண்ட கருத்துக்களின் வழி மனித இனத்தின் நல்ல செயல்களே அவர்களை உயர்ந்தவர்களாக மதிப்பிடச் செய்யும். இதனை,

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்

நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்

பட்டாங்கில் உள்ள படி"

என்ற பிற்கால ஔவையாரின் பாடலும் காலந்தோறும் பின்பற்றப்பட்டு வந்த நடைமுறையை தவறென சுட்டிக்காட்டுவதாகவே உள்ளது (Auvaiyar, 2011b). மேற்கண்ட கருத்துக்களின் வழி உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாட்டிற்கு பிறப்பு, தொழில் என்பது அடிப்படையாகாது என்று அறியப்படுகிறது.

## அடித்தள மக்கள்

நவீன காலங்களில் படைப்பிலக்கியங்களில் அடித்தள மக்கள் பற்றி பேசப்படுகிறது. அவர்களுடைய வாழ்வியல் இன்றையச் சூழலிலும் சாதியத்தின் அடிப்படையிலேயே பதிவுச் செய்யப்பட்டு வருகிறது. அடித்தள மக்கள் என்பதற்கு விளக்கம் தரும் போது "சாதி, செய்யும் தொழில், அரசியல் ஆதிக்கம், பாலியல் நிலை, பொருளாதார நிலை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது

அனைத்து நிலைகளிலும் தாழ்ந்திருக்கும் மக்கள்” எனப் பதிவு செய்யப்படுகிறது (Sivasubramaniyan, 2016). மேற்கண்ட கூறுகளில் தொழில், அரசியல் ஆதிக்கம், பொருளாதார நிலை, பாலியல் நிலை ஆகியவற்றில் ஏற்றத்தாழ்வுகளை கடந்து ஓரளவுக்காவது சமநிலையை அடைய முயற்சிகள் மேற்கொண்டு வந்துள்ளோம். ஆனால் எவ்வளவு தான் பொருளாதாரத்தில் உயர்ந்தாலும், நீ என்ன சமூகத்தைச் சேர்ந்தவன், சேர்ந்தவள் என்பதை கேட்டு அறிவதில் ஆர்வம் கொண்ட சமூகமாகவே இன்றும் இருப்பது பார்க்க கூடியதே.

ஆக சாதி என்ற காரணியால் மக்களினத்தில் சிலர் அடித்தளத்திற்குச் சென்றுள்ளனர் என்றால் அவர்களை மேல்தளத்திற்கு கொண்டு வர பொருளாதாரம் வேண்டுமா? அல்லது சான்றோர் கூறிய பண்புகள் வேண்டுமா? இரண்டும் இருந்தும் நீ என்ன சமூகத்தைச் சேர்ந்தவன், சேர்ந்தவள் என கேட்கும் சமூகத்தை எதிர்த்து நிற்பதா? என்ற கேள்விகள் தான் எழுகின்றன. பொருளற்ற சாதி என்ற சொல்லுக்கு மதிப்பளித்து பின்பற்றுவதை விட பொருளில்லை என்றாலும் உயிருள்ள மனிதனுக்கு மதிப்பளித்து வாழ்வது சிறந்தது என்பது தான் அறநூல்கள் உணர்த்தும் மனிதம். அத்தகு மனிதத்தை தான் நாலடியார் உணர்த்துகிறது.

ஆனால் சமூகமோ ஏதோ ஒரு காலத்தில் என்று என தெளிவாக அறியப்படாத காலக்கட்டத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறையால் வந்த சொல்லாட்சியை இன்றும் பின்பற்றுவது அறிவின்மையின் அடையாளமே. இன்று பறையன் என்று அடையாளப்படுத்தபடுபவன் மருத்துவப் பணிப்புரிகிறான். சக்கிலியன் என்று அடையாளப்படுத்தபடுபவன் காவலர் பணிப்புரிகிறான். வண்ணான் என்று அடையாளப்படுத்தப்படுபவன் ஆசிரியர் பணிப்புரிகிறான். அதனால் தொழில் அடிப்படையில் உயர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சான்றிதழ் கொடுப்பார்களா? காலம் மாறும் போது காலத்திற்கேற்ப பலவற்றை மாற்றிக் கொள்ளும் போது இதனை மட்டும் மாற்றிக் கொள்ள இன்னும் முன்வரவில்லை. காரணம் எப்போதும் தாழ்ந்தவர்களாக சிலர் இருக்க வேண்டும், இருந்தே தீர வேண்டும் என எண்ணும் சிலர் சமூகத்தில் இன்றும் இருப்பதால் தான் சாதியின் அடிப்படையில் அடித்தள மக்கள், விளிம்புநிலைமக்கள், ஒதுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஓரங்கட்டப்பட்ட மக்கள் என்ற சொல்லாட்சிகள் இன்றும் சமூகத்தில் நிலவுகின்றன. இத்தகு நிலையை கலையும் பொருட்டே கவிமணி அவர்களும்,

“பிறப்பினால் எவர்க்கும் - உலகில்

பெருமை வாராதப்பா!

சிறப்பு வேண்டுமெனில் - நல்ல

செய்கை வேண்டுமப்பா!”

என்று பதிவு செய்கிறார் (Desigavinayagam Pillai, 1955). காலம் காலமாக இலக்கியங்கள் சமூகத்தின் அனைத்து நிலைகளையும் பதிவு செய்துள்ளது. அப்பதிவுகளை நாம் பல்வேறு கோணங்களில் கண்டும் வந்துள்ளோம். அவற்றில் சில சரியான புரிதல்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சில தவறான புரிதல்களுடனும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்தகு புரிதல்களில் ஒன்று தான் உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற வேறுபாட்டிற்கு காரணமாகவும் அமைந்துள்ளது. இன்றும் இது குறித்த சரியான புரிதல்கள் மக்களிடையே இல்லை என்பதே உண்மையான நிதர்சனம்.

## முடிவுரை

நாலடியார் என்னும் அறநூல் சாதியத்தின் அடிப்படையில் பிரிக்கப்படும் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற சொல்லாடல்களுக்கு அளவுகோலாக பண்பு அல்லது குணத்தையை முதன்மைப்படுத்துகிறது. அதோடு பிறப்பு, தொழில் அடிப்படையில் பிரிக்கப்படும் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பிரிவினைகளும் ஏற்புடையவை இல்லை என்றும் மறுக்கிறது. இச்சமூகத்தில் உயர்ந்த பண்புகளால் தங்களை ஒவ்வொரு நாளும் மேம்படுத்திக்கொள்ளும் யாராக இருந்தாலும் அவர்கள் மேன்மக்கள் என்ற சொல்லாடலைப் பெறத் தகுதியானவர்கள் என்பதும் நாலடியார் வழிப் பெறப்படுகிறது.

மேற்கண்டவற்றில் தெளிவு பெற்றதன் வழி பண்பு நலனில் குறைபாடுடைய மக்களையே நாலடியார் அடித்தள மக்கள் என்று சுட்டுகிறது என்றும் அறியப்படுகிறது. நவீன காலங்களில் அடித்தள மக்கள் என்பதற்கு சில காரணிகள் கூறப்பட்டாலும் அவற்றிலிருந்து முன்னேற்றம் அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆனால் பொருளற்ற சாதியத்தின் அடிப்படையில் அடித்தள மக்கள் என்று வழங்கும் சொல்லாடல் ஏற்புடையதாக இல்லை என்பதும் பெறப்படுகிறது.

## References


Auvaiyar, (2011a) Aathichudi, First Edition, Aruna Publications, Chennai, India.

Auvaiyar, (2011b) Nalvazhi, First Edition, Aruna Publications, Chennai, India.

Desigavinayagam Pillai, S., (1955) Asia Jothi, Fourth Edition, Paari Nilayam, Chennai, India.

Madurai Muthaliyar, (1988) Naladiyar, First Edition, Mullai Nilaiyam, Chennai, India.

Nallatanar, (2012) Tirikatukam, Sixth Edition, Saratha Pathippagam, Chennai, India.

Sivasubramaniyan, (2016) Adithala makkal varalaru, first edition, new century book house, Chennai, India.

Thamizh priyan, (2015), Nanmanikkatikai, First Edition, Karpagam Puttakalayam, Chennai, India.

Thiruvalluvar, (2009) Thirukural Swami Chidambaranar, Second Edition, Kotravai Pathipagam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attributin 4.0 International License